ஜே. ஆர். ஜயவர்த்தன வரலாற்று ஆராய்ச்சி, சுவடிகள் மற்றும் நூலக நிலையத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1988 ஆம் ஆண்டின் 77 ஆம் இலக்க ஜே. ஆர் ஜயவர்த்தன நிலைய அதிகாரச் சட்டத்தின் 7(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிலையத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிலையத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர, ஜே.ஆர். ஜெயவர்த்தன வரலாற்று ஆராய்ச்சி, சுவடிகள் மற்றும் நூலக நிலையத்தின் 2017 டிசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07**

(i) காணிகளதும் கட்டிடங்களதும் பெறுமதிகள் வெவ்வேறாக மதிப்பிடப்பட்டுக் கணக்கிடப்பட வேண்டுமாயினும், அவ்வாறு நடைபெற்றிராததுடன், காணியின் பொருட்டும் 05 சதவீத தேய்மான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) அருங்கலைக் காட்சியகத்தில் உள்ள பழமை வாய்ந்த, பெறுமதிமிக்க சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் தெரியப்படுத்தப்பட வேண்டுமாயினும், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டின்போது மீண்டுவரும் தன்மையிலான செலவுகளுக்கு செலவிடப்பட்ட ரூபா 153,129 கூட்டுத்தொகையானது மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன், அப்பெறுமதியின் மீது ரூபா 6,334 க்கான தேய்மான நிதியேற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) நிலையமானது 1998 ஆம் ஆண்டில் ஜே. ஆர் ஜயவர்த்தன தகவல் நிலையம் எனும் பெயரிலான தனியார் கம்பனி ஒன்றில் மேற்கொண்ட முதலீட்டின் பெறுமதி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் ரூபா 4.3

மில்லியனாகக் காட்டப்பட்டிருந்ததுடன், இந்நிறுவனம் 2008 ஆம் ஆண்டு மூடப்படுகையில் அதன் சொத்துக்கள் ரூபா 61,500 ஆகப் பெறுமதியிடப்பட்டிருந்தன. நிறுவனம் மூடப்பட்டு 09 ஆண்டுகளானபோதும், அறவிடப்பட முடியாத மீதி மற்றும் சொத்துக்கள் சம்பந்தமாக கணக்குகளில் சீராக்கல்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை**

நிலையத்தின் சொத்துகளாகக் காட்டப்பட்டுள்ள ரூபா 59,419,511 பெறுமதியான 16 சொத்துகளது உரித்தையும் பிழையற்ற தன்மையையும் உறுதி செய்வதற்கான ஆவணச் சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனங்களுக்கும் தனி நபர்களுக்கும் வாடகைக்கு வழங்கிய கட்டிடங்களின் பொருட்டு 2 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த வாடகையாக ரூபா 2,324,708 அறவிடப்பட வேண்டியிருந்தது. அவ்வாடகையை அறவிடுவதற்கு நிலையம் நடவடிக்கைகளை மேற்கொண்டவாறிருந்தபோதும், மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அதனை அறவிட முடியாதிருந்தது.

(ஆ) அநேக ஆண்டுகளாக முன்கொண்டு வரப்பட்டவாறிருக்கும் ரூபா 370,825 கூட்டுத் தொகையுடைய 07 வரவு மீதிகள் மற்றும் ரூபா 272,222 கூட்டுத் தொகையுடைய 05 செலவு மீதிகள் என்பவற்றைத் தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப் பிரமாணம் 135 | நிதி அதிகாரங்களைக் கையளிக்கும் முறையான விதி முறைகள் நிலையத்தில் நிறுவப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 880 | பணத்திற்குப் பொறுப்பாக உள்ள உத்தியோகத்தர்கள், உறுதிச் சான்றுகளிலும் காசோலைகளிலும் கையொப்பமிடும் உத்தியோகத்தர்கள் என்போர் பிணை வைப்புச் செய்ய வேண்டுமாயினும், அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 16 ஆம் பிரிவு | வங்கி மேலதிகப்பற்று பெறப்படுகையில் பணிப்பாளர் சபையினதும் நிதி அமைச்சரதும் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமாயினும், அவ்வாறான அங்கீகாரமின்றி அதி கூடிய ரூபா. 1,693,242 வரை வங்கி மேலதிகப்பற்று பெறப்பட்டிருந்ததுடன், மேலதிகப் பற்று வட்டியாக ரூபா 20,810 கொடுப்பனவு செய்யப்பட்டுமிருந்தது. |
| (இ) | 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் கூற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் மின்சாரத் தொழில்நுட்பப் பதவி வகிக்கும் 2 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டில் ரூபா 106,800 போக்குவரத்துப் படியாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2016 டிசெம்பர் 22 ஆந் திகதிய தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சேவைகள் சபையின் 2004/புச/01 (2016 – திருத்தம்) சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | புத்தகங்கள் தொடர்பாக ஆண்டுதோறும் கணிப்பு மேற்கொள்ளப்பட்டு கணிப்புச்சபை சமர்ப்பிக்கும் அறிக்கையிலுள்ள பரிந்துரைகள் 3 மாதங்களுக்குள் அலுலாக்கப்பட வேண்டுமாயினும், 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைபெற்ற கணிப்பு முறையாக முடிவு செய்யப்படாததுடன், கணக்காய்வுத் தினமான 2018 ஏப்ரல் 30 ஆந் திகதியளவிலும் பொருட்கணிப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. |

### 2.5 போதிய அதிகாரத்துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2015 டிசெம்பர் 09 ஆந் திகதிய முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் 02/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு நிலையமானது 2017 ஆம் ஆண்டிற்கான மிகையூதியமாக ரூபா 411,916 ஐ 2017 டிசெம்பர் 29 ஆந் திகதி கொடுப்பனவு செய்திருந்தபோதும், சுற்றறிக்கைப் பிரகாரம் அதற்கான பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிலையத்தின் நிதிப் பெறுபேறு ரூபா 10,756,476 மிகை ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,510,103 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிப் பெறுபேற்றில் ரூபா 8,246,373 அதிகரிப்பு நிலவியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கட்டிட வாடகை ரூபா 5,136,959 அதிகரித்தும் நிலையான வைப்பு வட்டி ரூபா 2,551,520 அதிகரித்தும் இருந்தமையே மேற்படி அதிகரிப்புக்கான முக்கிய காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில், 2013 ஆம் ஆண்டில் ரூபா 7,523,410 ஆகவிருந்த மிகை 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பற்றாக் குறையாகி மீண்டும் 2016 மற்றும் மீளாய்வு ஆண்டுகளில் மிகையாகியுள்ளது. எவ்வாறாயினும், நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானத்தை மீண்டும் சீராக்கல் செய்கையில் 2013 ஆம் ஆண்டில் ரூபா 20,207,834 ஆகவிருந்த பங்களிப்பு 2014 ஆம் ஆண்டளவில் ரூபா 11,474,265 வரை குறைவடைந்தபோதும், 2015 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர் அதிகரிப்புள்ளாகி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 32,451,885 ஆகியிருந்தது.

### 3.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

நிலையத்தின் தொழிற்படு மூலதன முகாமைத்துவம் கருத்திற் கொள்ளப்படுமிடத்து மீளாய்வாண்டின் நடைமுறைச் சொத்து விகிதம் 7.1:1 மற்றும் உடனடிச் சொத்து விகிதம் 6.9:1 என உள்ளதுடன் முன்னைய நடைமுறச் சொத்து விகிதமும் உடனடிச் சொத்து விகிதமும் மீளாய்வாண்டின் விகிதங்களுக்குச் சமமாக இருந்தன. நடைமுறைச் சொத்துக்களில் 80 சதவீதமானவை குறுகிய கால முதலீடுகளைப் பிரதிபலிப்பதுடன் அதற்கமைய நிலையத்தின் பெறுமளவு சொத்துக்கள் திரவவியல் சொத்துக்களில் தேங்கி நிற்பதும் அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாடுகளும் மீளாய்வும்

செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், ரூபா 9,273,500 கிரயத்தில் இலக்கிடப்பட்ட 26 பணிகளில் ரூபா 7,648,500 இலக்கிடப்பட்ட 21 பணிகள் நடைபெறவில்லை. இவற்றுள் ரூபா 7,028,500 மதிப்பீட்டுக் கிரயத்துடனான 18 பணிகளுமே 2016 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கி இருந்தனவாகும்.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் பீஈடீ 12 இன் 4.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் மாதாந்த நிதிக் கூற்றுக்கள் மாதந்தோறும் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுவதுடன், 4.2.3(அ) மற்றும் (ஆ) என்பவற்றின் பிரகாரம் 06 மாதங்களுக்கு ஒருமுறை செயலாற்றல் அறிக்கை பணிப்பாளர் சபையில் கலந்துரையாடப்பட்டு அவ்வறிக்கை பொது முயற்சிகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படவும் வேண்டும். எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டின் பொருட்டு ஒரு பணிப்பாளர் சபைக் கூட்டம் மாத்திரமே நடைபெற்றிருந்தது. அவ்வாறே, அப்பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் 2017 ஆம் ஆண்டிற்கான பாதீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் என்பன எதிர்வரும் பணிப்பாளர் சபைக் கூட்டத்தின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தும் அதன் பின்னர் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடைபெறாமையால் 2017 ஆம் ஆண்டிற்கான பாதீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் என்பன பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முறையான சேவை உடன்படிக்கையோ அல்லது முறையான நியமனக் கடிதமோ இல்லாது பணிப்பாளர் நாயகத்தின் எழுத்துமூலக் கோரிக்கையின் பிரகாரம் நிலையத்தின் நூலக வளப் பாதுகாப்புக்கெனவும் அருங்காட்சியகம் மற்றும் சுவடிகள் பிரிவுகளது நிர்வாக நடவடிக்கைகளைப் பேணுவதற்கென விசேட அறிவு வாய்ப்பைப் பெறும் நோக்குடனும் பேராசிரியர் ஒருவரும் புத்தக இணைப்பாளரும் அத்துடன் சுவடிகளது பாதுகாப்பு நடவக்கைகளை மேற்பார்வை செய்வதற்கு தேசிய

சுவடிகள் திணைக்களத்தின் சுவடிகள் உதவியாளரதும் சேவை 2014 முதல் பெறப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின்போது பேராசிரியருக்கு ரூபா 329,725, சுவடிகள் பாதுகாப்பு நடவடிக்கை மேற்பார்வைக்கு விஜயம் செய்யும் பெண் உத்தியோகத்தருக்கு ரூபா 40,460 எனக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

(இ) வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டினது கட்டிட வாடகை வருமானமாக ரூபா 22,632,000 இனங்காணப்பட்டிருந்தபோதும், 17,343 சதுர அடி கட்டிடத்தையுடைய வளாகத்தை வாடகைக்கு வழங்குகையில் விலை மதிப்புத் திணைக்களத்தின் மூலம் வருடாந்த மதிப்பீட்டு வாடகை அறிக்கை பெறப்படாது நானாவித மாதாந்த வாடகையின் கீழ் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) வடக்கு வீதிச் செயற்திட்ட அலுவலகத்தைப் பேணும் இடம் தொடர்பாக 2017 செப்டம்பர் 26 ஆந் திகதி ஏற்பட்ட உடன்படிக்கையின் நிபந்தனை 01 க்கமைய ரூபா 900,000 வைப்புப் பணமாகப் பெறப்பட்டிருக்க வேண்டுமாயினும், அவ்வாறு பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 12 தவணைகளில் ரூபா 75,000 வீதப்படி அவ்வைப்புப் பணம் அறவிடப்பட்டிருந்தது.

(உ) 2017 ஆம் ஆண்டில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த கட்டிடங்களின் பொருட்டு நிலையம் நீர்க்கட்டணமாகச் செலுத்தியிருந்த தொகை ரூபா 499,200 ஆகும். வாடகைக்கு வழங்குகையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைப் பிரகாரம், நியாயமானதொரு தொகை நீர்க் கட்டணமாகக் குத்தகையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், குத்தகையாளரிடமிருந்து நிலையம் பணம் எதனையும் அறவிட்டிருக்கவில்லை.

(ஊ) உடன்படிக்கை இலக்கம் 459 இன் மூலம் நிலையமானது 2013 சனவரி 15 தொடக்கம் 2017 சனவரி 14 வரை மாதாந்தம் ரூபா 445,600 வாடகைப்படி 4,456 சதுர அடியை வாடகைக்கு வழங்குவதற்கு 2013 பெப்ரவரி 14 ஆந் திகதி ஜாவா நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து கொண்டிருந்தது. கணக்காய்வுத் தினமான 2018 மார்ச் 31 ஆந் திகதியளவில் இந்நிறுவனத்திலிருந்து ரூபா 1,314,843 வாடகை அறவிடப்பட வேண்டியிருந்துடன், அந்த நிறுவனத்தினது உபகரணங்களை அலுவலகக் காணியிலிருந்து அகற்றாமையால் அக்காணி வேறு விதத்தில் பயன்படுத்த முடியாதிருந்தது.

(எ) 2016 செப்டம்பர் 01 முதல் 2018 ஆகஸ்ட் 31 வரை 1,830 சதுர அடியை ஒரு சதுர அடி ரூபா 150 வீதம் மாதாந்த வாடகைக்கு வழங்குவதற்கான உடன்படிக்கையில் நிலையம் 2016 யூலை 08 ஆந் திகதி உடன்படிக்கை செய்தபோதும், மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நடவடிக்கைகள் தாமதமாகியதால் குறித்த இடத்தை அந்த நிறுவனத்திற்கு வழங்குவது 2017 பெப்ரவரி 28 வரை தாமதமாகியது. இதனால் நிலையம் ரூபா 1,647,000 வாடகையை இழந்திருந்தது.

### 4.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

நிலையத்தின் நூலகத்தில் விற்பனைக்கென உள்ள 04 வகைப் புத்தகங்களின் 2000 பிரதிகளை அச்சிடுவதற்கு அரசாங்க அச்சகத்திற்கு நிலையம் 2013 டிசெம்பர் 18 ஆந் திகதி ரூபா 264,040 கொடுப்பனவு செய்திருந்தது. 2018 மார்ச் 14 ஆந் திகதியளவில் 02 வகைப் புத்தகங்களின் 1,000 பிரதிகள் பெறப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 1000 பிரதிகள் கணக்காய்வுத் தினமான 2018 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் நிலையத்தை வந்தடையவில்லை. அவ்வாறே, விற்பனைக்கெனவிருந்த ரூபா 349,020 பெறுமதியான 978 புத்தகங்கள் பயன்படுத்தப்பட முடியாது அழிவடைந்திருந்தன.

## 4.4 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

2013 ஆம் ஆண்டில் நிலையம் ரூபா 309,120 க்குக் கொள்வனவு செய்த மோட்டார் சைக்கிள் ஒன்று பயன்படுத்தக்கூடியதாகவிருந்தும் 2015 முதல் பயன்படுத்தப்படாது நிறுவனத்தின் வளவில் பாதுகாப்பற்றவாறு தரித்து வைக்கப்பட்டிருந்தது. இம் மோட்டார் சைக்கிளுக்கு 2017 வரை காப்புறுதி, வருமான அனுமதிப் பத்திரம், புகைப் பரிசோதனைக் கட்டணமாக ரூபா 52,735 செலவழிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.5 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 ஆம் பந்தியினது (ஆ) மற்றும் (ஈ) பிரிவுகளின் பிரகாரம் சகல நிறுவனங்களும் வியூகக் குறிப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். அந்த வியூகக் குறிப்பும் பதவியணித் தகவல்களும் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். எனினும், நிலையத்தில் தற்போது பணிபுரியும் 31 பதவியணியினரது தொடர்பாகப் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிராததுடன், வியூகக் குறிப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணித் தகவல்கள் என்பன பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குறித்த சுற்றறிக்கையின் 9.3.1 (அ) பிரிவின் பிரகாரம், நிலையத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பொருட்டு பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கத்துடன் பணிப்பாளர் சபையினதும் குறித்த அமைச்சினதும் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமாயினும், அவ்வாறான அங்கீகாரம் பெறப்படவில்லை.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

## 5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்கையும் அடைதல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜி/17 ஆம் இலக்க தேசிய கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சினது செயலாளர் வெளியிட்ட கடிதம் மற்றும் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ''நிகழ்ச்சி நிரல்'' என்பவற்றின் பிரகாரம் தமது பரப்பெல்லைக்குள் வரும் பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்படுவது என சகல அரச நிறுவனங்களும் அறிந்திருக்க வேண்டுமாயினும், நிலையம் அதனை அறிந்திராமையால் அப்பணிகள் சம்பந்தமான நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களும் இலக்குகளும் அந்த இலக்கை அடைவதனையும் அளவிடுவதற்கான சுட்டு இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

## 6.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தலும்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்த 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டினது நிதிக் கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 24 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினம் என்பவற்றுக்கிடையே 09 முதல் 1261 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் நிலவியதால் பாதீடானது ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**07. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்கயாவின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது நிலையத்தின் செயலாளர் நாயகத்தினது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | குத்தகை வாடகை வருமானம் | விலை மதிப்பு அறிக்கையைப் பெறாமையும் குத்தகை உடன்படிக்கைப் பிரகாரம் செயற்படாமையும் |
| (ஆ) | நூலக நிர்வாகம் | புத்தகங்கள் பாதுகாப்பற்றவாறு களஞ்சியப்படுத்தப்பட்டிருத்தலும் சுவடிகள் பாதுகாக்கப்படாமையும் |
| (இ) | மதியுரைச் சேவைக் கொடுப்பனவு | முறையான உடன்படிக்கையின்றி மதிப்புரைச் சேவை பெறப்பட்டமை. |
| (ஈ) | உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வு நடைபெறாமை |
| (உ) | விழா மற்றும் மாநாட்டு மண்டப வருமானம் | பணம் பெறுவதற்கான கணனி முறைமையிலும் பணச் சேகரிப்பிலும் உள்ளகக் கட்டுப்பாடு நலிவாக இருத்தல் |
| (ஊ) | பொருட் கொள்வனவுச் செயற்பாடுகள் | 2006 பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையில் உள்ள ஏற்பாடுகளைக் கடைப்பிக்காமை. |